

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நிர்வாக சீர்திருத்த முன்னெடுப்பின் மூலமாக "எளிமை ஆளுமை" திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு முதியோர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமச் சான்றிதழ், மகளிர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல் விரிவாக்க சான்றிதழ் ஆகியவற்றை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், PWC. டேவிதார், (ஓய்வு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் முனைவர் ஜெயந்தி முரளி, ஆகியோர் கலந்து கொண்டனர்.




கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (29.05.2025) தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறையின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு(ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் சத்ய பிராத சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கே. நந்தகுமார், நுகர்வுப் பணிகள் எஸ்.பி.அம்ரித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

மூத்த பத்திரிகையாளர்

# ஏ.பி.மோகன் மறைவிற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 31 -

மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த மோகன் குடும்பத்திற்கு ரூபாய் 10 லட்சம் நிதியுதவி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

“மக்கள் குரல்” நாளிதழின் மூத்த செய்தியாளரும், சென்னை பத்திரிகையாளர் மன்ற உறுப்பினருமான ஏ.பி.மோகன் (வயது 66) அவர்கள் தனியார் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக நேற்று (29.05.2025) சென்னையில் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

ஏ.பி.மோகன் அவர்கள், “மக்கள் குரல்” பத்திரிகையில் செய்தியாளராக 40 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியவர். அனைவரிடமும் நல்ல பண்புடனும், அன்புடனும் பழகும் இனிய பண்பாளர். இவரது பத்திரிகைத் துறையின் பணி அனைவராலும் பாராட்டுக்குரியது என்பதை நினைவு கூர்கிறேன்.

ஏ.பி.மோகன் அவர்களின் மறைவு பத்திரிகை உலகிற்கு மிகப்பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் – உத்தமநாத சுவாமி உடனுறை பிரஹதம்பாள்

# திருக்கோயிலில் புதிய திருத்தேர் வெள்ளோட்ட விழா!

## அமைச்சர் எஸ்.ரகுபதி- கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, மே 31 -

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் உத்தமநாத சுவாமி உடனுறை பிரஹதம்பாள் திருக்கோயிலில், புதிய திருத்தேர் பிரதிஷ்டை மற்றும் வெள்ளோட்ட விழாவினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் 28.05.2025 அன்று துவக்கி வைத்தார்.

பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் உத்தமநாத சுவாமி உடனுறை பிரஹதம்பாள் திருக்கோயிலுக்கு புதுக்கோட்டை தேவஸ்தான நிதியிலிருந்து நூறாண்டுகளுக்கு பிறகு சுவாமி திருத்தேர் புதிதாக செய்யப்பட்டு புதிய திருத்தேர் பிரதிஷ்டை மற்றும் வெள்ளோட்ட விழா துவக்கி வைக்கப்பட்டது.

இந்த சிறப்புமிக்க புதிய திருத்தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் பொதுமக்கள், பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பிராம்பட்டியில் புதிய பகுதிநேர அங்காடி திறந்து வைக்கப்பட்டது. இந்த அங்காடியானது 367 வது பகுதி நேர நியாய விலைக் கடையாகும். அதன்படி, நார்த்தாமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டுப்பாட்டில் உள்ள கீழக்குறிச்சி அங்காடிகளிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள பிராம்பட்டி பகுதி நேர அங்காடியானது 110 குடும்ப அட்டைகளுடன் பிரதி வாரம் வியாழக்கிழமைகளில் இயங்கும் வகையில் பிராம்பட்டி கிராம மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பகுதி நேர நியாய விலைக் கடை திறந்து வைப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் நீண்ட தூரம் சென்று குடிமைப் பொருட்கள் வாங்கி வந்தது தவிர்க்கப்பட்டு நேரமும், அலைச்சலும் குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், தாய் அங்காடியான கீழக்குறிச்சி அங்காடியிலிருந்து, பிராம்பட்டி அங்காடி சுமார் 3.5 கி.மீ தூரம் உள்ளதாலும், மழைக் காலங்களில் பொதுமக்கள் தங்களது அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு மிகவும் சிரமமாக இருந்து வந்த நிலையில் இனிவரும் காலங்களில், பிராம்பட்டி கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தங்கள் கிராமத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன், துணைப் பதிவாளர் (பொதுவிநியோகத் திட்டம்) ராஜவேலு, குளத்தூர் வட்டாட்சியர் அ.சோனை கருப்பையா, துணை மேயர் எம்.லியாகத் அலி, கீரை. தமிழ் ராஜா, எஸ்.கருப்பையா, என் சேட்டு, ஓ.எஸ். வெங்கடாச்சலம், பி. அண்ணாத்துரை, வை. விஜயக்குமார், டாக்டர் செ. குறிஞ்சிவாணன், அஸ்ரப் அலி, ராஜேந்திர சோழன், எம்.ஏ.எம்.இம்தியாஸ், டி.செல்வம், கே.எம்.கே. ரவிக்குமார், வீரய்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் – தலைவர் தலைமையில் ஜீன்1 அன்று மதுரையில் நடைபெறும்

# பொதுக்குழு கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!



பெரம்பலூர், மே 31 -

பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நாளை (01.06.2025 - ஞாயிற்றுக் கிழமை), காலை 9.00 மணியளவில், மதுரை, உத்தங்குடி, “கலைஞர் திடலில்” நடைபெறவிருக்கும் பொதுக்குழு கூட்டத்தில்,

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி,

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க,

பெரம்பலூர் மாவட்டத்தைச்சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை எடுத்து வந்து, மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள “மினிட்” புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்குண்டான ‘பேட்ஜ்’ ஐ பெற்றுக் கொண்டு காலை 8.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கிற்குள் நமது பெரம்பலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை . மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஞான.இமயநாதன் ஏற்பாட்டில் திருஇந்தளூர் ஊராட்சியைச் சேர்ந்த தேமுதிக முன்னாள் ஒன்றிய செயலாளர் கலாநிதி தலைமையில் 50 பேர் தேமுதிகவில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம். எல். ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர் உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் என்.இளையராஜா, மாநில விவசாய அணி இணை செயலாளர் கே.ஜி. சீனிவாசன், துணை செயலாளர்.எஸ்.செல்வமணி ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர். ராஜா, மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. மனைவி மறைந்த

# மு.அ.பரமேஷ்வரி 4 ஆம் ஆண்டு நினைவு தினம்!

## ஆ.இராசா.எம்.பி. - அரசு கொறடா பா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

பெரம்பலூர், மே 31 -

பெரம்பலூர், மேனாள் ஒன்றிய அமைச்சர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. மனைவி மறைந்த மு.அ.பரமேஷ்வரி அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டம், வேலூர் கிராமத்தில் உள்ள அவரது சமாதியில் ஆ.இராசா எம்பி. அரசு தலைமைக் கொறடா பா.ராமச்சந்திரன், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சொ.க.கண்ணன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழணியாண்டி, ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி,

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆதர்ஷ் பச்சேரா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், குடும்ப உறுப்பினர்கள் மயூரிஇராசா, ஆ.ராமச்சந்திரன், ஆ.கலியபெருமாள், ஆ.சிவசண்முகம், வேலூர் ஊராட்சி மன்ற தலைவர் அம்பிகை சிவசண்முகம், ஆசிரியர் ரா. பச்சமுத்து, விஜயா ம்பாள் பச்சமுத்து, ரெங்கராஜ், கமலாரெங்கராஜ், அரசு வழக்கறிஞர் சந்தானலெட்சுமி, தமிழ்நாடு புதுச்சேரி மாநில முன்னாள் அரசு வழக்கறிஞர் சந்திரமோகன்,

மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், மாநில இலக்கிய அணி அமைப்பாளர் புலவர்.கவிதைப்பித்தன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி. ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மா.இராஜ்குமார், கு.சின்னதுரை, ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க.வரதராஜன்,

சென்னை மேற்கு மாவட்ட பொருளாளர் கென்னடி, சென்னை மேற்கு மாவட்ட பிரதிநிதி ராஜகாந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டு செல்வி ராஜேந்திரன், எஸ். அண்ணாதுரை, அழகு.நீலமேகம், ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ. ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன், அரசு வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ. கே.அருண், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர்,லெப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர்உசேன்,

குரும்பலூர் பேரூர் கழகச் செயலாளர் எம்.வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம். கே.கரிகாலன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கவியரசு, மாவட்ட கலை, இலக்கியப் பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராம லிங்கம்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. ராசா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் விசி.ரவி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம் மற்றும் நீலகிரி, மேட்டுப்பாளையம், அன்னூர் மற்றும் பெரம்பலூர், திருப்பூர்,அரியலூர் மாவட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் தஞ்சையில் 30.05.2025 அன்று கழக விவசாய அணி மற்றும் விவசாய தொழிலாளர் அணி சார்பில் டெல்டா மாவட்டங்கள் இணைந்து ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகை கடன் நிபந்தனைகளை திரும்பப் பெற வலியுறுத்தி நடைபெறும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக நாகை மாவட்ட விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் பேசினார். உடன் மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ் கே வேதாரத்தினம் , மாவட்டவிவசாய அணி அமைப்பாளர் எஸ். பால்ராஜ் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
### மே 31 (2004)



திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் கிளைக் கழகச் செயலாளராக நீண்ட நாட்கள் பணியாற்றியவர்.

பின்னர், 1991ஆம் ஆண்டு சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

2000ஆம் ஆண்டு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் துணைவியாராவார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.